15-7-81

விலை: சதம் 75

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆடி 1 | ரம்ழான் 13 | இதழ் 151
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 16-7-1981

பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது
0 புரூஸ் லீ போஸ்டர்
0 சைட் பொக்ஸ்
0 அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தலைக்கவசங்கள்
0 HERO சைக்கிள்கள்
0 விண்ட்ஸ் ஸ்கிறீன்
பல்கன் ஏஜென்சி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685

★ எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மீதான

# நம்பிக்கையில்லாப் பிரேரணை:

# கூட்டணி கலந்துகொள்ளும்!

## சபாநாயகர் - 'அமிர் சந்திப்பின் திருப்பம்

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணை விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்ளும்.

இம்மாதம் 23, 24ந் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படவிருக்கும் இவ்விவாதத்தில் பங்குபற்றுவதில்லை என்றும், பிரேரணையை விவாதத்துக்கு எடுக்குமுன்னர் திரு. அமிர்தலிங்கம் மாத்திரம் சபையில் தனிப்பட்ட விளக்கமொன்றை அளிக்கச் சபாநாயகரிடம் அனுமதி கோருவது என்றும், சபாநாயகர் அநுமதியளிக்கும்பட்சத்தில் தனிப்பட்ட விளக்கத்தை அளித்துவிட்டு, விவாதத்தில் கலந்துகொள்ளாது அனைவரும் வெளியேறுவது என்றும் முன்னர் கொள்கை அளவில் தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இப்போது இம்முடிவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

தமிழ் ஈழக் கோரிக்கை பற்றிப்பாராளுமன்றத்திலேயே விவாதிப்பதற்கான சந்தர்ப்

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ். அபிவிருத்திசபை கூட்டம்: அனுமதிபெற்றவர் மட்டுமே சமுகமளிக்கமுடியும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டத்திற்கு அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் மட்டுமே சமுகமளிக்கமுடியும்.

இம் மாதம் 20ந் திகதி காலை யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கும் முதலாவது கூட்டத்திற்கு, மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் பத்துப் பேருக்கும் பத்து அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவிருக்கிறது.

யாழ். மாவட்டசபை உறுப்பினரின் செ பார் ச க

[6ம் பக்கம் பார்க்க]

## தாதிமார் (இன்று முதல்) மீண்டும் சட்டப்படி வேலை?

[யாழ்ப்பாணம்]

கடந்த ஒருவார காலமாகச் சுகவீன லீவில் நின்று வந்த யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரித் தாதிமார்களின் லீவு இன்றுடன் முடிவடைவதால் அவர்கள் இன்று வேலைக்குத் திரும்பக் கூடுமென்று யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர்கள் வேலைக்குத் திரும்பும்பட்சத்தில், சட்டப்படியே வேலைசெய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நோயாளர் குறைவு

யாழ். ஆஸ்பத்திரியில் தினம் சராசரி 150 நோயாளர்கள் வார்ட்டுகளுக்கு அனுமதிக்கப் பட்டுவந்தபோதிலும் கடந்த இரு தினங்களாக இத்தொகை பெருமளவில் குறைந்துள்ளதாகவும், வார்ட்டுகளில் மருந்துவைக்கும் அலுமாரிகளைப் பூட்டி அவற்றின் திறப்புகளையும் தனியார் கொண்டு சென்றுவிட்டதால் நோயாளர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், முடிந்தவரை நோயாளர்களின் வசதிகள் பேணப் பட்டுவருவதாகவும் வைத்திய வட்டாரம் தெரிவித்தது.

[6ம் பக்கம் பார்க்க]

## இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் வங்கி ஊழியரும் சட்டப்படி வேலை!

[யாழ்ப்பாணம்]

மக்கள்வங்கிகளில் கடமையாற்றும் இலங்கை ஊழியர் சங்கத்தினர்; இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து சட்டப்படி வேலைசெய்வதில் இறங்கியுள்ளனர்.

நேர்மையான முறையில். தகைமைக்கேற்ப பதவியுயர்வு வழங்கவேண்டும்; வேலைநீக்கம் செய்யப்பட்ட மக்கள்வங்கி மத்திய செயற்குழு அங்கத்தவர் ஒருவருக்கு திரும்பவும் வேலை வழங்கவேண்டும்' ஆகிய இரண்டு கோரிக்கைகளையும் வற்புறுத்தியே மக்கள்வங்கி ஊழியர்கள் சட்டப்படி வேலைசெய்வதில் இறங்கியுள்ளனர். இது சம்பந்தமாக இலங்கை ஊழியர்சங்க யாழ்ப்பாணக்கிளை உறுப்பினரொருவர் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:

'இதுவரை காலமும்நேர்மையான முறையில், தகைமையின்

[6ம் பக்கம் பார்க்க]

## வட பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நடத்திய முதல் மாநாடு

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபராக திரு. ஏ. நவரத்தினம் நேற்று பிற்பகல் பதவியேற்றார்.

வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இதுவரைகாலமும் பதவிவகித்து வந்த திரு. பி. மகேந்திரன்

[6-ம் பக்கம் பார்க்க]

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட

CENTURION ஹெல்மட் (1879 முதல் பிரபல்யம் பெற்றது)

இப்பொழுது பல விலைகளில் யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது

ஆறு தரங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்குமாக வர்ணக்கலரில் 'சென்ரியுறின்' ஹெல்மட் விற்பனையாகின்றன.

ரூபா 350-00-க்கு மேல்....

வட இலங்கை பிரதம விற்பனையாளர்

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட்

122, கே. கே. எஸ். வீதி -- யாழ்ப்பாணம்

போன்: 8127

சியாமளா பிரார்த்தனை

அலைகடல் மத்தியிலிருந்து அருள்பாலிக்கும் நயினை அம்பாள் சித்திரத்தேரில் திருவீதி வரும், இன்று அனைத்து மக்களுக்கும் அனைத்து நலனும் கிட்டப் பிரார்த்திக்கின்றோம்.

சியாமளா

140, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8078

யாழ். நகரிலிருந்து சௌகரியமாகக் கொழும்பு செல்வதற்குத் தினசரி பஸ்சேவை--

நிலாந்தி ரவல்ஸ்

ஆசனங்களை சியாமளாவில் பதிவுசெய்யுங்கள். [0340]

# ஹைதராபாத் இனக்கலவரம் 14பேர் பலி; 250பேர்கைது!

## 3 எம். எல். ஏக்களும் காவலில்

ஹைதராபாத், ஜூலை 15 ஹைதராபாத்தில் இந்து - முஸ்லிம் இனக்கலவரங்களை அடுத்து ஆந்திர சட்டசபையின் இரண்டு முஸ்லிம் உறுப்பினர்கள் உட்பட 250 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இவர்களுள் ஏழுபேர் பாரதிய ஜனதா கட்சி முக்கிய உறுப்பினர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலவரங்களின்போது 14 பேர் பலியானார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

வன்செயல்கள் இடம்பெற்ற பகுதிகளில் காலவரையறையின்றி ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டதை அடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பழைய ஹைதராபாத்தில் உள்ள மசூதி ஒன்றின் முன்பாக இந்துக்களின் ஊர்வலம் ஒன்று பாண்ட் வாத்தியத்துடன் சென்றபோது ஏற்பட்ட கலவரத்தை அடுத்தே இவ் வன்செயல்கள் ஆரம்பமாகியது என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆந்திராவில் வகுப்புவாத நடவடிக்கைகளை முற்றாக ஒழித்துக்கட்ட மாநில அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்றும் வகுப்புவாத இயக்கங்களையும் நடவடிக்கைகளையும் தடைசெய்வதற்கும் புதிய சட்டங்களை இயற்ற முடிவு செய்துள்ளது என்றும் அரசு அதிகாரி ஒருவர் கூறினார். (இ)

## சாட்சியும் சந்தேகநபரும் மோதிக்கொண்டனராம்!

### இருவரும்ரூ. 500 பிணையில் அனுமதி

(புலோலி)

வல்வெட்டித்துறை கைக்குண்டு வீச்சு கொலை முயற்சி வழக்கின் சந்தேக நபரும் சாட்சியும் மோதிக் கொண்டதைத் தொடர்ந்து இருவரையும் தலா 500 ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதித்துள்ளார்.

இக்கொலைமுயற்சி வழக்கின் சாட்சியான சக்திவேலும் சந்தேக நபர்களில் ஒருவரான சோமசுந்தரம் என்பவரும் வல்வெட்டித்துறை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து மோதிக் கொண்டதுடன் அமைதிக்குப் பங்கம் விளைவித்தனராம். இதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைப் பொலிசார் இருவரையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். கணேசன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இருவரும் கொலை முயற்சி வழக்கொன்றில் கட்சிக்காரர்களாக இருந்துகொண்டு இவ்வாறுநடந்து கொள்வதுமன்னிக்க முடியாததென்றும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய முறையில் நடந்தகொண்டால் பிணை ரத்துச் செய்யப்படுமென்றும் எச்சரித்து இருவரையும் தலா 500 ரூபா பிணையில் செல்லுமாறும் காலை 25,000 ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறும் உத்தரவிட்டனர்.

## காலராவுக்கு 9 பேர் பலி!

கல்கத்தா, ஜூலை 15 கல்கத்தாவில் 'காலரா' நோய்க்கு 9 பேர் பலியாகியுள்ளனர் என்றும் இந்நோய் காரணமாக 100 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அமீர் சுல்தானை கண்டுபிடிக்க

### ரூ. 10,000 சன்மானம்

பெங்களூர், ஜூலை 15 பெங்களூரில் அண்மையில் கள்ளச்சாராயம் அருந்தி 325 பேர்மரணமடைந்தசம்பவத்தின் சூத்திரதாரி என்று பொலிசாரால் கருதப்படும் அமீர் சுல்தான் என்பவரைக் கைது செய்வதற்கு வேண்டிய தகவல்களைத் தருபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சன்மானம் தரப்படும் என்று கர்நாடக பொலிசார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் இடம்பெற்ற நாள் முதல் அமீர் சுல்தானும் அவரது குடும்பத்தினரும் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிசார் தெரிவித்தனர். [இ]

## இன்றைய பலன்

ஆனி மாதம் 1ம் திகதி

வியாழக்கிழமை

(16-7-81)

மேடம்: நீண்டநாள் பிரச்சனையில் இன்று சமரசமுடிவு காணப்படும். மற்றவர்கள் மத்தியில் நல்லசெல்வாக்குச் சம்பாதித்துக்கொள்வீர்கள். அரசியல் கிலருக்கு ஆர்வம் பிறக்கக்கூடும்.

இடபம்: புதிய எண்ணங்கள் மலரும், தொழில் துறையில்நல்ல முன்னேற்றத்தில் மேற்பதவிமுண்டு. பொது மக்களுடன் தொடர்புகொள்ளும் சிலருக்கு இருப்பிடமாற்றத்துக்கு இடமுண்டு பொதுசனத் தலைமையும் கிடைக்கக்கூடும்,

மிதுனம்: அதிஸ்டதேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம், திரைப்படத் தொழில் ஈடுபடுபவர்களுக்கு உதாசீனிக்கக்கூடும் .செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவு தப்பாமற்கிடைக்கும்,

கடகம்: செய்தொழில் தடுமாற்றநிலை ஏற்படும். வேண்டியவரைகூட பகைத்துக் கொள்ள நேரிடும், குடும்பத்தில் பிணி தோன்றும் மனத்திடம் விரும்பத்தக்கது.

சிங்கம்; வாழ்க்கை தேடு பள்ளம் நிறைந்ததாக இருக்கும், கடன்காரர்களும் நேரிடலாம். உடல்நலத்தை பேணிக் காக்கவும். அபாயகரமான காரியங்களை தவிர்ப்பது விரும்பத்தக்கது.

கன்னி: மனம்நிறைந்த சம்பவங்கள் இடம்பெறும், பெரியவர்களின் ஆசி தாராளமாக கிடைக்கும் கைவிடப்பட்ட பணவரவு மீண்டும் கிடைக்கும். வீட்டிலும் மகிழ்ச்சி உண்டு,

துலாம்; உணர்ச்சிமயமான தினம் மனப்போராட்டங்கள் நடைபெறும். உடல் நலனும் பாதிக்கப்படலாம், குடும்பத்தில் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

விருச்சிகம்: ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் தாய்வழி மூலம் நற்செய்தி கிடைக்கலாம். எதிர்பாராத விருந்துபசாரத்துக்கும் இடம் ஏற்படும்,

தனு: ஒளிமயமான எதிர்காலத்துக்கு இன்று வித்திடப்படும். சிலர் வாழ்க்கையில் திருமணப்பேச்சும் இடம்பெறும். தங்கையின் முன்னேற்றம் குறித்துநடவடிக்கை எடுக்கப்படும்.

மகரம்: வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும், உணவு விஷயத்தில் அதிகவனம் செலுத்தவும். தேவையில்லாத தொடுப்பதற்கு எதிர்கள் முளைவர், நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படலாம் அமைதி நன்று

கும்பம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள் காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும். மகிழ்ச்சியான தினம்,

மீனம்: ஆணவப்போக்கு அடிச்சறுக்கவைக்கும். பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறலாம். மேலதிகாரிகளின் கழுகுப்பார்வை உங்களைவட்டமிடலாம். முன்யோசனையுடன் செயலாற்றுக.

சோதிடகலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## ரமழான் சிந்தனை

நோன்பாளியாக இருந்த கொண்டு புனிதயுத்தத்தில் அவன் இறந்துவிட்டால் 70 வருடங்களுக்கு நரக நெருப்பைவிட்டும் அவனது முகத்தை தூரமாக்கி விடுவான் என நபிகள்பிரான் அருளியுள்ளார்கள்.

(ஆதாரம்—புஹாரிமுஸ்லிம்)

ஸஹர் முடிவு: 4-27 நோன்பு திறக்கும் நேரம்: 6-33

—தொகுப்பு: மௌலவியா பௌளியா கலீம்

## மத்திய கர்நாடக ஆதீனம் புதிய அத்தியட்சகர்

[யாழ்ப்பாணம்]

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் அத்தியட்சகராகக் கடந்த பத்தாண்டு காலம் சிறப்பாக கடமையாற்றிய அதி வந். டேவிட் ஜெபரத்தினம் அம்பலவாணர் தென் இந்திய திருச்சபை மத்திய கர்நாடக ஆதீனத்தின் அத்தியட்சகராக சினட் மாசபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னுள் அத்தியட்சரான அதி. வந். கெனத் கில் தமது தாயகம் (பிரிட்டன்) திரும்பியுள்ளார்.

சுமார் 40,000 அங்கத்தவர்களைக் கொண்ட மத்திய கர்நாடக ஆதீனத்தின் தலைமை அலுவலகமும் ஆசன ஆலயமும் பெங்களூரில் இருக்கிறது.

அத்தியட்சர் அதி வந் அம்பலவாணர் தமது கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் முடித்த இறையியற் படிப்பை சேரம்பூர் இறையியற்கல்லூரியிலும் லண்டன் கிங்ஸ் கல்லூரியிலும் மேற்கொண்டார்



பிறின்ஸ்ரன் (நியூஜேர்ஸி) வேதசாஸ்திரக் கல்லூரியிலும் மேற்படிப்புகள் பயின்றார்.

இலங்கையிலிருந்து ஒரு அத்தியட்சர் இந்தியாவின் ஆதீனம் ஒன்றில் கடமையாற்ற அழைக்கப்பட்டது இது முதற்தடவையல்ல. அத்தியட்சர் லக்தாசடி மெல் 1961 ஆம் ஆண்டில் இவ்வாறு அழைக்கப்பட்டு சுமார் எட்டு வருடகாலம் கல்கத்தாவில் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

## வரவேற்பளிப்பர்

[உடுப்பிட்டி]

அடுத்த மாதம் 5-ம் திகதி புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ள கரவெட்டியைச் சேர்ந்த அருட், செல்வன் கிறிஸ்ரோபர் ஜோர்ஜ் பெயர் குமாருக்கு சிறப்பான வரவேற்பு ஒன்றை அளிப்பதற்கு கரவெட்டிப் பங்குக் கத்தோலிக்க மக்கள் தீர்மானித்துள்ளார்கள்,

இவ் வரவேற்பு விழாவை கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடாத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## உதயதாரகை ஆண்டுவிழா

[புலோலி]

பருத்தித்துறை உதயதாரகை விளையாட்டுக்கழகத்தின் 6வது ஆண்டு விழா இம்மாதம் 24ம் திகதி டாக்டர் வீ, எஸ், சண்முகநாதன் தலைமையில் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளது'

இவ்விழாவிலே தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவரும் நல்லூர் பாராளுமன்றப்பிரதிநிதியுமான திரு. மு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## இடம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்முகரத்தினம் கலந்து கொண்டு பேசினார்.

தொடர்ந்து பேசும்பொழுது "இக் கல்லூரியின் இன்றைய அதிபர் எமக்கு அப்பொழுது ஆசிரியராக இரசாயனவியல் கற்பித்தவர். நான் இக் கல்லூரியின் இரசாயனத்துறை வளர்ச்சிக்கு வைப்பதற்காக ஆயிரம் ரூபா பணத்தை, வங்கியில்இட்டு அதில் கிடைக்கும் வட்டியிலிருந்து ஒவ்வொருவருடமும் உயர்வகுப்பு மாணவனுக்கு இரசாயனத் துறையில் பரிசளிப்பதற்கு பணத்தை அன்பளிப்புச் செய்கின்றேன் என்று."

இக் கல்லூரிக்கென ஒலிபெருக்கி செற் ஒன்றை வாங்கி அன்பளிப்புச்செய்வதாகவும் குறிப்பிட்டார். மற்றும் அதிபர் ஆசிரியர், மாணவர்களும் உரையாற்றினர்கள்.

# லெபனன் நிலைகள்மீது மீண்டும் இஸ்ரேல் விமான தாக்குதல்

## இருதரப்பிலும் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

ஜெருஸலம் ஜூலை 15 இஸ்ரேலிய விமானப்படை விமானங்கள் மீண்டும் நேற்று தென் லெபனனில் உள்ள பாலஸ்தீன நிலைகள் மீது தாக்குதல் நடத்தியபோது அவற்றை எதிர்த்துத் தாக்கிய சிரிய போர் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த விமானச் சண்டையின்போது இஸ்ரேலிய விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்துள்ள போதிலும் இஸ்ரேல் இச்செய்தியை மறுத்துள்ளது.

கடந்த ஐந்து நாட்களில் இஸ்ரேலிய விமானங்கள் பாலஸ்தீன விடுதலை இயக்க நிலைகள் மீது தாக்குதல் நடத்தியது இதுவே மூன்றாவது தடவையாகும். (இ)

## யாழ். இந்து இல்லப்போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2-45 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி யோகுபசுபதி கலந்து கொள்வார். வைத்திய கலாநிதி திருமதி நளாயினி யோகு பசுபதி பரிசுகளை வழங்குவார்.

2-வது ஹவுஸ்புல் வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)
தொலைபேசி: 331

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பிரமிளா
கவரிமான் (கலர்)

வெஸ்லி (வல்வெட்டித்துறை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

வெலிங்டன் (யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10 30, 2-30, 6-00, 9-30
தசாவதாரம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே!
சாந்தி (யாழ்நகர்) 10-30 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா,
தர்மராஜா (கலர்)
COMING 'COMA' The Number One Suspense Thriller

இன்னும் சிலதினங்கள் மட்டும்.
வின்சர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, சுருளிராஜன், எஸ். வி. சுப்பையா
ஆதி பராசக்தி
(கலர்—புதிய பிரதி)
பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை உண்டு

ராஜா (யாழ் நகர்)
17-7-81 வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக் காட்சியுடன் ஆரம்பமாகிறது!
எம்.ஜி.ஆர் - லதா
பல்லாண்டு வாழ்க

போயா தினத்தையொட்டி
இன்றுசினிமாக்காட்சியில்லை

மன்னாரில் நடைபெற்ற

வடமாநில விளையாட்டுப்போட்டியில்

# யாழ். மாவட்டம் முதலிடம்

[மன்னார்]

வடமாநில விளையாட்டுப் போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் 55 புள்ளிகளையும் பெண்கள் 45 புள்ளிகளையும் பெற்று யாழ். மாவட்டம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட வடமாநில விளையாட்டுப்போட்டிகள் இரு தினங்கள் மன்னார் விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இவ்விளையாட்டுப் போட்டிகளை மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆரம்பித்து வைத்தார். யாழ். மாவட்டக் கொடியை யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரியும் முல்லைத்தீவு மாவட்டக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அதிகாரியும் வவுனியா மாவட்டக் கொடியை வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரியும் மன்னார் மாவட்ட கொடியை மன்னார் மாவட்ட அதிகாரியும் ஏற்றி வைத்தனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் மன்னார் மாவட்ட அமைச்சர் எம். ஈ. எச். மஹ்ரூப் மன்னார் எம். பி. திரு. எஸ். சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள் திரு வி. கைலாசபிள்ளை ஜனாப் எஸ் கே. சாகுல் ஹமீது மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ ஜே. செந்தில்நாதன் மன்னார் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். தேவலால் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமலஸ் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜே. செந்தில்நாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எம். ஜீவரத்தினம் மேற்கொண்டிருந்தார்.

வடமாநில விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

ஆண்கள்

100 மீற்றர் ஓட்டம்:- ரி. ஆர் எஸ். மிஸ்கின், யாழ். மாவட்டம்.

200 மீட்டர் ஓட்டம்: ரி. ஆர். எஸ். மிஸ்கின், யாழ். மாவட்டம்.

400 மீட்டர் ஓட்டம்:- எஸ். பாலசிங்கம், மன்னார் மாவட்டம்.

800 மீட்டர் ஓட்டம்:- எஸ். அன்ரன், மன்னார் மாவட்டம்.

1500 மீட்டர் ஓட்டம்: எஸ். இதம்பரநாதன், யாழ். மாவட்டம்.

5000 மீட்டர் ஓட்டம்: எஸ். சிவானந்தன், மன்னார் மாவட்டம்.

உயரம் பாய்தல்: எஸ். அந்தோனிப்பிள்ளை, மன்னார் மாவட்டம்.

நீளம் பாய்தல்:- எஸ். அன்ரன் அல்பேட், யாழ். மாவட்டம்.

கெந்திப் பாய்தல்:- எஸ். தேவராஜா, யாழ். மாவட்டம்

குண்டுவீசுதல்:- ஏ. எஸ். செபமாலைமுத்து, யாழ். மாவட்டம்.

பரிதிவட்டம் வீசுதல்:- ஏ. எஸ். செபமாலைமுத்து, யாழ். மாவட்டம்.

சைக்கிள் ஓட்டம்:- வி. கைலைநாதன், யாழ். மாவட்டம்

மரதன் ஓட்டம்:- ஆர். சண்முகப்பிள்ளை, யாழ். மாவட்டம்

கரப்பந்தாட்டம்:- மன்னார் மாவட்டம்.

எல்லே ஆட்டம்:- யாழ். மாவட்டம்.

உதைபந்தாட்டம்:- யாழ். மாவட்டம்.

சிறந்த விளையாட்டு வீரன்: எஸ். பாலசிங்கம் மன்னார் மாவட்டம்.

அதிசிறந்த விளையாட்டு வீரன்: ரி ஆர். எஸ். மிஸ்கின் யாழ் மாவட்டம். இவர் 100 மீற்றர் ஓட்டத்தை 11 விநாடிகளில் ஓடி முடித்து சாதனை நிலைநாட்டினார்.

பெண்கள்

100 மீட்டர் ஓட்டம்: ஏ தேவகலா யாழ் மாவட்டம்.

200 மீட்டர் ஓட்டம்: பி மாலினி, யாழ். மாவட்டம்

400 மீட்டர் ஓட்டம்: எ. கலிஸ்ரு, முல்லைத்தீவு மாவட்டம்.

300 மீட்டர் ஓட்டம்: ஏ. குணசீலி, மன்னார் மாவட்டம்.

உயரம் பாய்தல்: எஸ். ஜெயகுமாரி, யாழ் மாவட்டம்.

நீளம் பாய்தல்: பி மாலினி, யாழ் மாவட்டம்.

குண்டு வீசுதல்: வைலத்தோனு, வவுனியாமாவட்டம்.

பரிதி வட்டம் வீசுதல்: எம் மஞ்சுளா, யாழ் மாவட்டம்.

சைக்கிள் ஓட்டம்: ஈ. எறிட் எவன் யாலிசி, யாழ் மாவட்டம்.

வலைப்பந்தாட்டம்: யாழ் மாவட்டம்.

சிறந்த விளையாட்டு வீராங்கனை ஏ தேவகலா. இவர் 100 மீட்டர் ஓட்டத்தை 14 விநாடிகளில் ஓடி முடித்தார்.

இவ்விளையாட்டுப்போட்டியில் யாழ். மாவட்டம் ஆண்கள் 55புள்ளிகளும். பெண்கள் 45புள்ளிகளும்பெற்றனர். மன்னார் மாவட்டம் ஆண்கள் 44புள்ளிகளும், பெண்கள் 26 புள்ளிகளும் பெற்றனர். முல்லைத்தீவு மாவட்டம் ஆண்கள் 19புள்ளிகளும், பெண்கள் 20புள்ளிகளும் பெற்றனர். வவுனியா மாவட்டம் ஆண்கள் 11புள்ளிகளும், பெண்கள் 13 புள்ளிகளும் பெற்றனர்.

இவ்விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெறுவோர் விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தும் அகில இலங்கை விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொள்வார்கள். [அ]

## தகப்பனுடன் சச்சரவு: மகன் பிணையில் செல்லஅனுமதி

[புலோலி]

தகப்பனுடன் அடிக்கடி சச்சரவில் ஈடுபட்டுவந்த மகன் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு 3000ஆயிரம் ரூபா பிணையில் விடப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஸ்ரீதரன் என்ற வாலிபனே தகப்பனுடன் அடிக்கடி சச்சரவில் ஈடுபட்ட படியாலும் அவரைத் தாக்கியபடியினாலும் பருத்தித் துறைப் பொலிசாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். பரேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

நீதவான் சந்தேக நபரை 3000 ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறும் இம்மாதம் 23ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## எரிசாராய ஊழல்

# கேரள சட்டசபையில் கொந்தளிப்பு!

## எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

திருவனந்தபுரம், ஜூலை 15

தமிழ்நாடு-கேரள எரிசாராய ஊழல் விவகாரம் நேற்று சட்டசபையில் பெரும்புயல் ஒன்றைக் கிளப்பிவிட்டது.

கலால் திணைக்கள செலவுக் கோரிக்கைகளை அதற்குப் பொறுப்பான அமைச்சர் நேற்று சபையில் சமர்ப்பிக்க முயன்றபோது, எரி சாராய ஊழல் விவகாரம் குறித்து விசாரணை செய்வதற்கு மத்திய அரசாங்கமும் தமிழக, கேரள அரசுகளும் கமிஷன்களை நியமித்துள்ள இவ்வேளையில் கலால் திணைக்கள செலவுக் கோரிக்கைகளைச் சபையில் சமர்ப்பிக்க முடியாதென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருணாகரன் ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார்.

இந்த ஆட்சேபனையை ஆளும் இடதுசாரி முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை அடுத்து சபையில் கூச்சல், குழப்பம், வாக்குவாதம் நடைபெற்று எதிர்க்கட்சிகள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். (ஓ)

## மண்வெட்டி விலை குறைந்தது

(புலோலி)

யாழ். மாவட்ட சமநலச் சேவை நிலையங்கள், மத்திய நிலையங்களில் விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட யாழ். ரக மண்வெட்டியின் விலையைக் குறைக்குமாறு, யாழ். மாவட்ட சமநலச் சேவை திணைக்கள உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் அறிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட யாழ். ரக மண்வெட்டி ஒன்று இதுவரை யாழ். மாவட்ட சமநலச் சேவை மத்திய நிலையங்களில் ரூ 52-50 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. உதவி ஆணையாளர் இம் மண்வெட்டியின் விலையைப் 10 ரூபாவால் குறைத்து 42-50 க்கு விற்பனை செய்யுமாறு அறிவித்துள்ளார்

## பொலிஸ்சார்ஜன்ட் பாராட்டப்பட்டார்

[புலோலி]

பருத்தித்துறை பொலிஸ் சார்ஜன்ட் ஜனாப் எம். ரீ. எம், உவைஸ் இப்பகுதிமக்களால் பாராட்டப்பட்டுள்ளார்

இப்பகுதியில் அடிக்கடி நடைபெற்றுவந்த சைக்கிள் திருட்டுக்களினால் இப்பகுதி மக்கள் பெரிதும் அச்சமடைந்திருந்ததுடன் இத்திருட்டு நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டுமென்றும் பொலிசாரிடம் கோரியிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து சார்ஜன்ட் உவைஸ் மேற்கொண்ட சைக்கிள் திருட் முறியடிப்பு முயற்சியினால் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து அவர் 29 சைக்கிள்களை மீட்டுள்ளார். மேலும் பல சைக்கிள்களை மீட்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதனாலேயே மக்கள் சார்ஜன்ட் உவைஸை பாராட்டியுள்ளனர்.

வடமாகாண

## இ. ஆசிரியர்சங்கப் பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடமாகாணக் கிளையின் பொதுக் கூட்டம் இம்மாதம் 19-ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் தாய்ச்சங்கத் தலைவர் திரு. எச். என். பெர்னாண்டோ, பொதுச்செயலாளர் திரு. சித்திரால் த பெரேரா உட்படப் பலர் உரையாற்றுவர். [மா]

## மதகுரு இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்ப் பகுதியில் சேவையாற்றி வந்த அருட்திரு ஐசாக் செல்வரத்தினம் இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து, அறவழிப் போராட்டக் குழு, கொழும்பு பிஷப் அருட்திரு சுவிதின் பெர்னாண்டோவுக்குத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

இத்தந்தியில், "பாதிரியார் அருட்திரு ஐசாக் செல்வரத்தினம், யாழ் மாவட்ட மக்களின் வாழ்வு உயர அயராது பாடுபட்டு வந்தார்" எனக் குறிப்பிட்டுள்ளது.

மற்றும் பொதுமக்கள் பலரும் ஆட்சேபித்து தந்திகள் அனுப்பியுள்ளனர். [மா]

# "யாழ். வர்த்தகர்களுக்கு பாதுகாப்பு அளிக்குக!"

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் இடம்பெற்ற வன்செயல்களைக் கண்டித்து ஜனாதிபதி, பிரதமர், வர்த்தக கப்பல்துறை அமைச்சர் ஆகியோருக்கு யாழ்ப்பாணம் நவீன சந்தை வர்த்தக உரிமையாளர் சங்கமும், அகில இலங்கை வணிகர்சமூகமும் கூட்டாக மகஜர்கள் அனுப்பிவைத்துள்ளன.

இம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"வடபகுதியில் திட்டமிட்டு நடாத்தப்பட்ட வன்செயல்களால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் யாழ். வர்த்தகர்களே. 1958ல் நடந்த கலவரங்களின் போதும், 1977ல் நடந்த வன்செயல்களின்போதும், 1981ல் நடந்த திட்டமிட்ட வன்செயல்களின்போதும் பாரதூரமாக பாதிப்படைந்தவர்கள் வர்த்தகர்களே.

'இனிமேலாவது வர்த்தக நிலையங்கள் சூறையாடப்படுவதையும், தீவைக்கப்படுவதையும் தடுக்க நடவடிக்கைஎடுப்பதுடன் பாதுகாப்பும் அளிக்க வேண்டும். 'பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவுகள் இருந்தால் இப்பிரச்னைகள் எழுவதற்கு இடமில்லை.' [மா]

# "பத்திரிகை நிருபர்களுக்கு விசேட படி வேண்டும்"

## ராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

'அரசாங்கத்தின் பத்திரிகைச் சட்ட மூலத்தினால் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்குக் கிடைக்கவுள்ள சகல வசதிகளும் நாடு பூராவிலும் உள்ள பத்திரிகை நிருபர்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையில் பத்திரிகைச் சட்ட மூலத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும்."

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸைக் கோருவதென இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கப் பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இப்பொதுச் சபைக் கூட்டம், யாழ். பொண்ட் கல்வி நிலயத்தில் இலங்கைப் பத்திரிகையாளர் இயக்கத் தலைவர் திரு ஏ. என். எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

"நாடு பூராவிலுமுள்ள பத்திரிகை நிருபர்களுக்குப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு உதவுமுகமாக இலவச பாஸ்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும், பத்திரிகைக் காரியாலயங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு மாத்திரமின்றிப் பத்திரிகைநிருபர்களுக்கும் விசேட படி வழங்கும் திட்டம் உருவாக்கப்படவேண்டும். தகவல் திணைக்களம் நாடு பூராவும் உள்ள பத்திரிகையாளர்களை ஒன்று கூட்டி, வருடந்தோறும் பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்த ஒழுங்குசெய்யவேண்டும். இலங்கை மன்றக் கல்லூரி பத்திரிகையாளர்களுக்கு மாவட்ட ரீதியில் கருத்தரங்குகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும. பத்திரிகையாளர்கள் விரும்பும் பட்சத்தில் தபால் தந்தித் திணைக்களத்திடம் தொலைபேசி வசதிக்கு விண்ணப்பித்தால் அவர்களுக்கு உடனடியாகத் தொலைபேசி வசதி செய்துகொடுத்து வருடாந்த தொலைபேசி வாடகைப்பணமாக 250 ரூபா அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். பத்திரிகைப் புகைப் படப்பிடிப்பாளர்களுக்கு புகைப்படம் எடுக்கும் உபகரணங்களை 50வித மானிய அடிப்படையில் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து உதவவேண்டும்"

[உடுப்பிட்டி-நிரு]

# யாழ் பஸ் சேவை: இப்படியும் நடக்கிறது!

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்வண்டி ஒன்றில் சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு விறகுக்கட்டுகள் ஏற்றப்பட்டு பஸ் பாதை மாற்றி ஓட்டப்பட்ட சம்பவம் பற்றி குறிப்பிட்ட பஸ்களில் பிரயாணம் செய்த பிரயாணிகள் சபைத்தலைவருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது. முல்லைத்தீவிலிருந்து புதுக்குடியிருப்பு ஊடாக பஸ் வண்டியொன்று யாழ்ப்பாணம் நோக்கிப்புறப்பட்டது. வழமை போல் இந்த பஸ் கண்டி வீதி வழியாக பஸ் நிலையத்தை அடையுமென எதிர்பார்த்த பிரயாணிகள், திடீரென பஸ் வண்டி கச்சேரியைத் தாண்டியதும் பழையபூங்கா பாதையூடாக பாஸையூர் கடற்கரையை நோக்கிச்சென்றதாம் பிரயாணிகள் சாரதியிடம் பாதை மாற்றம்பற்றி கேட்டபொழுது இதுதான் வழமையான பாதையென்றும் பதில் கொடுக்கப்பட்டதாம் பின்னர் இந்த பஸ்வண்டி கடற்கரை வீதி வழியாக வரும்பொழுது குருநகர் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் நிறுத்தப்பட்டு சுமார் நூறு கட்டு விறகுஇறக்கப்பட்டதாம். பஸ் நிலையத்தில் பிரயாணிகள் வந்தடைந்த பின்னர் விசாரித்த பொழுதுதான் விறகு இறக்குவதற்காக பாதை மாற்றப்பட்ட விஷயம் தெரியவந்தது.

பொதிகளுடனும், பிள்ளைகளுடனும் வந்த பிரயாணிகள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து வாடகைக் கார்கள் மூலம் சின்னக்கடை மடத்தடி பஸ்தியாம்பிள்ளை சந்தி ஆகிய இடங்களுக்கு சென்றனர் என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

பஸ்வண்டியில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் விசாரணை அதிகாரி ஒருவரும், திடீர் பரிசோதனைக்குழுவைச் சேர்ந்த நால்வரும் பிரயாணம் செய்ததாக கூறப்படுகின்றது. விறகுக்கட்டுகள் இறக்கப்பட்ட வீடு, வட பிராந்திய போக்குவரத்துச் சபை தலைமை அலுவலகத்தின் ஒரு அதிகாரியினுடையது என்று தெரியவந்துள்ளது. இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு பிரயாணிகள், சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினத்தை கோரியுள்ளனர்.


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள குளிர் சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லமுத்து ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் 173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0325


## 31-வது நாள் நினைவுதினம்



திரு சி. இராசா
(இராசா சைக்கிள் வேக்ஷொப் உரிமையாளர்)

தோற்றம்: 14-4-1928
மறைவு: 17-6-1981

காலமெல்லாம்உங்கள் நினைவால் கலங்கவிட்டுக் கந்தனுடன் கலந்துவிட்ட எமது அன்புத்தெய்வமே, நம் வாழ் நாளெல்லாம் இனி உங்கள் நினைவு தானே.

17-7-81 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதிச்சடங்கில் நேரில் கலந்துகொண்டும், தந்திமூலமும் எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

திருமதி சி. இராசா
குடும்பத்தினர்
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

0334

## உணவு முத்திரைக்கு ரூ. 14 கோடி 16 லட்சம்

[கொழும்பு]

உணவு முத்திரைக்கு மாதாந்தம் 14 கோடி 16 லட்சம் ரூபா செலவிடப்படுவதாக நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதில் 11 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உணவு முத்திரை வழங்குவதற்கு 7 கோடி 80 லட்சம் ரூபாவும், மண்ணெண்ணெயை உணவு முத்திரை மூலம் மானியமாக வழங்குவதற்கு 1 கோடி 50 லட்சம் ரூபாவும் செலவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நம்பிக்கையில்லா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பத்தை இப்பொழுது அரசாங்கமே ஏற்படுத்தியிருக்கிறது என்றும், இதனை முழுமையாகப் பயன்படுத்துவதே விவேகமானதென்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் காலஞ்சென்ற திரு. மு. திருச்செல்வம் கியூ சி., ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் தமிழ் ஈழம் பற்றி முன்வைத்த அத்தனையையும் பாராளுமன்றத்திலும் முன்வைக்க இது சந்தர்ப்பமாக அமையலாம் என்றும் கூறப்படுகிறது.

திரு. திருச்செல்வத்தின் இவ்வாதம் தொடர்பாக தீர்ப்பளிக்கும் அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு இல்லை' என்று அப்போது 'ட்ரயல்-அட்பார்' நீதிமன்றம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது

### சபாநாயகர்-அமிர் சந்திப்பு

திரு. அ. அமிர்தலிங்கம் 'தனிப்பட்ட விளக்கம்' தொடர்பாக சபாநாயகர் அல்ஹாச் பாக்கிர் மாக்காரைச் சந்தித்ததாகவும் இத்தனிப்பட்ட விளக்கம் தொடர்பாக நிரந்தரக திகள் ஏதாவது இடமளிப்பதாக கருதும்பட்சத்தில் சபையிலேயே அசனை எழுப்பும்படி சபாநாயகர் கூறியதாகவும் அறியப்படுகிறது.

சபையில் சிலவேளைகளில் இவ்வொழுங்குப் பிரச்னை நிராகரிக்கபபடும்பட்சத்தில் விவாதத்தில் கலந்துகொள்ளாது விடின் எதையுமே கூறமுடியாதநிலை ஏற்படலாமென்றும் எனவேதான் இப்போது முன்னைய முடிவை மாற்றி, விவாதத்தில் கலந்துகொள்ள இவர்கள் ஆலோசிப்பதாகவும் தெரிகிறது'

18ந் திகதி, தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச் சபை கூடுகின்றது அதன் பின்னர் பாராளுமன்றக் குழு கூடி, திரு. அ. அமிர்தலிங்கம் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் கலந்துகொள்வதுபற்றி விரிவாக ஆராயும். [ம]

## அனுமதிபெற்றவர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடிதத்துடன் யாழ். அரசாங்கச் செயலகத்தில் அலுவலக உதவியாளரிடம் இந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். [மா]

## மக்கள்வங்கி...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையிலேயே பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தை மாற்றி நேர்முகப் பரீட்சைமூலமே பதவி உயர்வு வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது இத்திட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில் ஊழியர்களின் பொதுவான ஒரு வரப்பிரசாதத்தை முறியடிப்பதுபோலிருக்கிறது. இப் புதிய முறையை ஆட்சேபித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைநடத்தியதன்மூலம் சுமுகமான முடிவு ஏற்படாத பட்சத்தில் சட்டப்படி வேலைசெய்வதென தீர்மானித்துள்ளோம்.

'இதுசம்பந்தமாக இம்மாதம் 6-ம் திகதி கொழும்பில் நடந்த மறியல் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் மத்தியசெயற்குழு அங்கத்தவர் ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவருக்குத் திரும்பவும் வேலைவழங்கவேண்டும்' என்று கூறினார்.

இலங்கை ஊழியர் சங்கத்தினர் பொதுவாக எடுத்துக்கொண்ட முடிவுகள் வருமாறு-

மேலதிக வேலைசெய்வதில்லை. அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களின் வேலைகள் செய்யாமை. தரத்துக்கேற்ற வேலை,'

யாழ் மாவட்டத்திலுள்ள சகல மக்கள் வங்கிக்கிளைகளிலுமுள்ள ஊழியர்களும் சட்டப்படி வேலைசெய்வதில் இறங்கியுள்ளனர்' [மா]

## வட பிராந்திய

[1ம் பக்கத் தொடர்ச்சி

பொலிஸ் தலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது தெரிந்ததே.

திரு. ஏ. நவரத்தினம் பதவியேற்றவுடன் பொலிஸ் உயர் அதிகாரிகளின் மகாநாடொன்றைக் கூட்டினார்.

இம்மாநாட்டில் யாழ். பொலிஸ் அதிபர் ஜுனைப் மஹறாத், உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராசா உட்பட மற்றும் பல பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். [வெ

## தாதிமார்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாதிகளின் விலகல் காரணமாக அநேகமான நோயாளர்கள் வார்ட்டுகளிலிருந்து வெளியேறிவருவதாகவும், வெளியிலுள்ள தாதிமார் பார்மஸிகளில் வார்ட் நோயாளர்கள் மருந்து வாங்கிப் பாவித்துவருவதாகவும் வார்ட் நோயாளர்கள் தெரிவித்தனர்.

வைத்திய ஆய்வுகூட வியலாளர்கள், எக்ஸ்-றே தொழில் நுட்பவியலாளர்கள், பார்மஸிஸ்டுகள் போன்ற உத்தியோகஸ்தர்கள் இருவருடப் பயிற்சியுடன்கூடிய சம்பளம் பெறுகின்றபோதிலும், தாதிமார்கள் 3வருடப்பயிற்சிபெற்றும் அடிப்படைச் சம்பளம் அவர்களை விடக்குறைவாக உள்ளதாகவும், தாதிமார் சம்பளத்தில் பாரபட்சம் நிலவுவதாகவும் தமக்கு நீதியான சம்பள உயர்வு வழங்கப்படவேண்டுமெனவும் தாதிமார்கள் கோரி வருவது தெரிந்ததே.

### கிளிநொச்சித் தாதிகள் வேலை

இதேவேளை கிளிநொச்சிஆஸ்பத்திரித் தாதிமார் கடமையில் ஈடுபட்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

# ஜப்பானின் உதவியுடன் ரூ. 30 கோடி செலவில் தந்திக்கம்பி இணைப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில், சூறாவளி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஜப்பான்நாட்டின் உதவியுடன் நிலத்திற்கு அடியில் தொலைபேசி கம்பிகள் இணைப்பதற்கான வேலைகள் நடைபெற்றுவருகின்றது.

சுமார் முப்பது கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலைகளை ஜப்பான் நாட்டு பொறியியலாளர்களின் மேற்பார்வையில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் செய்துவருகின்றார்கள், இவர்களுக்கு வேலைக்கேற்ப ஊதியம் வழங்கப்படுகின்றது.

## தனியார் பஸ்பற்றி ஆராய உபகுழு

[கொழும்பு]

தனியார் பஸ்ஸின் எதிர்கால நடவடிக்கை குறித்து ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்க உபகுழுவொன்றை நியமிப்பதென்று நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இவ் உபகுழுவில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமத், நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல், கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ, ஆகியோர் இடம்பெறுவர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 80ம் இலக்கத்தில் உள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Regd No. QB 100285/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126 Registered as a News Paper at the General Post Office Sri Lanka